# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2101/37 - 2018 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2018.12.14

*2101/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறியீட்டு இல.: டிக்/லேன்/02/46.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், திக்வெல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில், வலஸ்கல கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவையாளரின் இலக்கம் மு. பி. மாறை 2754 ஆம் முன்னீட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழ்வரும் காணித் துண்டின் விபரம் :

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : வில்லபத்தினிகஹவத்த எனும் மஹஹேன ; விபரம் : வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கையொன்றுள்ளது; உரிமை கோருபவர் : திக்வெல்ல, வலஸ்கல, தம்பகஸ்ஆரயில் வதியும் எம். எம். லீலாரத்தன ; விஸ்தீரணம் : 0.2914 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ரஞ்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2018, நவெம்பர் 30.

*12 - 872*


1A - G 29092 - 17 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*